**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குமாரபாளையம்</u>**

**<u>அ.வ.எண்.259/2020</u>**

2026ம் ஆண்டு ஜீலை மாதம் 22ம் நாள் வாதி தரப்பு சாட்சி வா.சா.2 ன் வாக்குமூலம் விசாரிக்கப்பட்டு 1969ம் ஆண்டின் 10வது சட்ட விதிகளின் ஏற்பாட்டின் படி ஆணையிட்டுப் பிரமாணம் செய்யப்பட்டது.

எனது சாட்சியப் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரங்கள் என்னால் சொல்லப்பட்டதுதான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான்.

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | ஆனந்தன் | தொழில்: | |
| த/பெ: | பழனிசாமி கவுண்டர் | சமயம்: | இந்து |
| முகவரி: | காளிங்கராயன்பாளையம் | வயது: | 52 |
| தாலுக்கா: | குமாரபாளையம் | மாவட்டம்: | நாமக்கல் |

<u>22.07.2026</u>

**<u>மனு தாக்கல் செய்ததன் பேரில் கூடுதல் முதல் விசாரணை</u>**

நான் இவ்வழக்கின் 2ம் வாதி ஆவேன். நான் எனது முதல் விசாரணைக்காக நிரூபணப் பிரமாணப் பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளேன். அதனைப் படித்துப் பார்த்துக் கையொப்பம் செய்தேன். அதில் உள்ள சங்கதிகளை நான் சொல்லி தான் எனது வழக்கறிஞர் தயார் செய்தார். இவ்வழக்கில் நான் இன்று தாக்கல் செய்துள்ள கீழ்க்கண்ட ஆவணங்களைக் குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | 03.09.2022 | 3ம் பிரதிவாதி பெயரில் உள்ள கிரைய ஆவணம் | சான்றிட்ட நகல் | வா.சா.ஆ.10 |

**<u>மனு தாக்கல் செய்ததன் பேரில் 3ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1) நான் இவ்வழக்கின் 2ம் வாதி ஆவேன். 1ம் வாதியை எனக்கு எவ்வளவு வருடங்களாக தெரியும் என்றால் சுமார் 3,4 வருடங்களாக தெரியும், நெருங்கிய பழக்கம் கிடையாது. எனக்கும் 1ம் வாதிக்கும் வழக்கிற்கு முன்பு

பழக்கம் இருந்ததா என்றால் இல்லை. இவ்வழக்கின் சங்கதிகள் மற்றும் ஆவணங்களை நான் படித்துப் பார்த்துள்ளேன் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. இவ்வழக்கினை 1ம் வாதியுடன் சேர்ந்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல, நான் முதலில் வழக்கினை தாக்கல் செய்த பின்னிட்டு 1ம் வாதி தாக்கல் செய்தார். எனது பிரமாண பத்திரிக்கை எங்கு வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் எனது வீட்டில் ஆகும். எனது பிரமாண பத்திரிக்கையில் உள்ள சங்கதிகள் எனக்குத் தெரியும் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதியின் கடன்தாரர்களுக்காக பிரதிநிதித்துவத்தின் அடிப்படையில் நான் தாக்கல் செய்துள்ளேன் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். பிரதிவாதியின் கடன்தாரர்கள் எத்தனை பேர் என்றால் சுமார் 6,7 பேர் வந்தார்கள், வழக்கு தாக்கல் செய்த பின்னிட்டு வரவில்லை. 1,2ம் பிரதிவாதிகளின் மீது வழக்கு தாக்கல் செய்வதாக கூறிய கடன்தாரர்கள் வழக்கு தாக்கல் செய்ய வந்தார்களா என்றால் இல்லை.

2) மேற்படி கடன்தாரர்கள் வழக்கு தாக்கல் செய்ய எங்கு வந்தார்கள் என்றால் காளிங்கராயன்பாளையம், காமதேனு நகர் மெயின் ரோட்டில் உள்ள எனது வீட்டிற்கு வந்தார்கள். எவ்வளவு நபர்கள் எனது வீட்டிற்கு வந்தார்கள் என்றால் 5,6 நபர்கள் வந்தனர். வீட்டில் எத்தனை நபர்கள் இருந்தார்கள் என்றால் நான் மட்டும் இருந்தேன், மற்றவர்கள் பெயர் தெரியாது. யார் யார் என்ன தேதியில் எவ்வளவு தொகை கடனாக 1ம் பிரதிவாதிக்கு கொடுத்தார்கள் என்று குறிப்பு ஏதேனும் எழுதிக் கொண்டேனா என்றால் இல்லை. இவ்வழக்கினை எந்த வழக்கறிஞர் மூலம் தாக்கல் செய்தேன் என்றால் தற்போது உள்ள எனது வழக்கறிஞர் மூலம் தாக்கல் செய்தேன். 1ம் வாதி யார் மூலம் வழக்கு தாக்கல் செய்தார் என்றால் எனக்குத் தெரியாது. 1ம் வாதியும் நானும் சேர்ந்து எந்த வழக்கறிஞரிடமும் வழக்கு தாக்கல் செய்ய வேண்டி செல்லவில்லை என்றால் சரிதான். எனது பிரமாண பத்திரிக்கை

எனது வீட்டில் கணினி அச்சு செய்யப்பட்டதா என்றால் நான் எழுத்துப்பூர்வமாக எழுதி எனது வழக்கறிஞரிடம் கொடுத்தேன்.

3) வா.சா.ஆ.1 என்ன ஆவணம் என்று எனக்குத் தெரியுமா என்றால் எனக்கு எழுதப்படிக்கத் தெரியாது. 1ம் வாதியிடமிருந்து 1ம் பிரதிவாதி வா.சா.ஆ.1ன் படி ரூ.50000 கடன் பெற்றுள்ளார் என்றால் வழக்கினை தாக்கல் செய்த பின்னிட்டு தான் 1ம் வாதி என்னிடம் கூறினார், எனவே வா.சா.ஆ.1 பற்றி எனக்குத் தெரியாது. 1ம் பிரதிவாதியின் மீது அ.வ.எண்.199/2017 திருச்செங்கோடு உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் வழக்கு தாக்கல் செய்த பின்னிட்டு தெரிந்து கொண்டேன், வா.சா.ஆ.2 பற்றி எனக்குத் தெரியாது. வா.சா.ஆ.2 ஆவணத்தினை மற்றவர் மூலம் படித்துத் தெரிந்துகொண்டேனா என்றால் இல்லை. 1ம் வாதியால் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள் மற்றும் அதில் உள்ள சங்கதிகள் குறித்து எனக்குத் தெரியாது என்றால் சரிதான்.

4) பிரதிநிதித்துவ அடிப்படையில் தாக்கல் செய்யப்பட்ட இவ்வழக்கில் நானோ, 1ம் வாதியோ நாங்கள் பிரதிநிதியாக நியமனம் செய்யப்பட்டதற்கான ஆவணங்கள் எதனையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தோமா என்றால் இல்லை. 1ம் பிரதிவாதிக்கு கடன் கொடுத்தவர்களின் பிரதிநிதி என்பதை நிரூபிக்க கூடிய எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்பதால் இவ்வழக்கினை தாக்கல் செய்ய எனக்கு எந்த முகாந்திரமும் இல்லை என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி எனக்கு எவ்வளவு தொகை தர வேண்டும் என்றால் ரூ.11 லட்சம் ஆகும். அதற்காக வழக்கு ஏதேனும் தாக்கல் செய்தேனா என்றால் ஈரோடு நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன். ஈரோடு முதலாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் அ.வ.எண்.40/2016 என்ற வழக்கினை நான் 1ம் பிரதிவாதி மீது தாக்கல் செய்தேன். 14.06.2016 தேதியில் மேற்படி அ.வ.எண்.40/2016ல் ஒரு தலைபட்ச தீர்ப்பு பிறப்பிக்கப்பட்டது என்றால் சரிதான்.

5) இன்றுவரை மேற்படி தீர்ப்பின் அடிப்படையில் நிறைவேற்று மனு எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி அ.வ.எண்.40/2016ல் தாவா சொத்தினை இ.ம.எண்.155/2016 ஈரோடு முதலாம் கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் பற்றுகை செய்யப்பட்டு அது 15.09.2017ம் தேதியில் இ.ம.எண்.211/2017 மூலமாக நீக்கறவு செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி **15.09.2017 தேதியிட்ட முதலாம் கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தின் இ.ம.எண்.211/2017 ல் கொடுக்கப்பட்ட உத்தரவு பி.வா.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்ன அடிப்படையில் பற்றுகை செய்யப்பட்ட தாவா சொத்து பி.வா.சா.ஆ.4ல் நீக்கறவு செய்யப்பட்டது என்றால் எனக்கு ஞாபகமில்லை.

6) 3ம் பிரதிவாதியை எனக்குத் தெரியாது என்றால் சரிதான். வா.சா.ஆ.10ன் படி தான் தாவா சொத்து 3ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுக்கப்பட்டது என்றால் எனக்கு வழக்கு தாக்கல் செய்த பின்னிட்டு தான் தெரியும். தாவா சொத்தினைப் பொறுத்து 3ம் பிரதிவாதி நல்ல எண்ணத்தின் அடிப்படையில் தாவா சொத்தினை கிரையம் பெற போவதாக பொது அறிவிப்பு ஒன்றினை 26.08.2022 தேதியிட்ட தினமலர் நாளிதழில் கொடுத்துள்ளார் என்றால் எனக்குத் தெரியாது. தாவா சொத்து உள்ளிட்ட இதர சொத்துக்களையும் சேர்த்து 3ம் பிரதிவாதி வா.சா.ஆ.10ன் படி உண்மையில் வெளிப்படையாக தான் கிரையம் செய்துள்ளார் என்றாலும், மேற்படி கிரையம் செல்லும் என்றாலும் சரியல்ல. தாவாவில் என்ன பரிகாரம் கோரியுள்ளேன் என்றால் பணத்தினை திருப்பி பெற வேண்டி தாக்கல் செய்துள்ளேன். தாவாவில் உரிய நீதிமன்றக் கட்டணம் செலுத்தப்படவில்லை என்றாலும், அதனால் தாவா நிலைக்கத்தக்கதல்ல என்றாலும் சரியல்ல.

7) 12.01.2016 ஆவண எண்.126/2016 ஆவணம் செல்லத்தக்கதல்ல என்ற பரிகாரம் கோர எனக்கு எந்த ஒரு முகாந்திரமும் இல்லை என்றால் சரியல்ல. பிரதிவாதிகளுக்கு எதிராக கோரியுள்ள நிரந்தர உறுத்துக்கட்டளை

பரிகாரம் கோர எனக்கு எந்த ஒரு முகாந்திரமும் இல்லை என்றால் சரியல்ல. எனது பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் வழக்கிற்காக பொய்யாக தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதிக்கு ரூ.11 லட்சம் வங்கியில் இருந்து எடுத்துக் கொடுத்தேனா என்றால் இல்லை, வீட்டில் இருந்த பணத்தில் கொடுத்தேன். நான் வருமான வரி கட்டி வருகிறேனா என்றால் ஆம். சாட்சி பின்னிட்டு வழக்கு தாக்கல் செய்த பின்னிட்டு தான் கட்டி வருவதாக சாட்சியமளிக்கிறார். வழக்கிற்கு பின்னிட்டு தான் வருமான வரி தாக்கல் செய்வதாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதிக்கு கடனாக கொடுத்த ரூ.11 லட்சத்தினை கணக்கில் காட்டிள்ளேனா என்றால் எனக்கு ஞாபகமில்லை, விவசாயம் மற்றும் வியாபாரம் மூலம் வந்த பணமாகும். என்ன வியாபாரம் செய்து வருகிறேன் என்றால் காய்கறி மொத்த வியாபாரம் செய்து வருகிறேன். எத்தனை வருடங்களாக மேற்படி வியாபாரம் செய்கிறேன் என்றால் சுமார் 15 வருடங்கள் ஆகும். எனது வியாபாரத்தின் வருடாந்திர வருமானம் எவ்வளவு என்றால் சரியாக சொல்ல இயலாது. எவ்வளவு விஸ்தீரண நிலத்தில் விவசாயம் செய்து வருகிறேன் என்றால் 10-1/2 ஏக்கர் ஆகும்.

8) விவசாயத்தில் இவ்வளவு தொகை சேர்த்து வைத்ததாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. சரியான முகாந்திரம் இல்லாமலும், பிரதிநிதித்துவ அடிப்படையில் இவ்வழக்கினை தாக்கல் செய்வதாக பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. 06.05.2013 தேதியிட்ட வா.சா.ஆ.6 என்ன மதிப்புடையது என்றால் எனக்குத் தெரியாது. வா.சா.ஆ.6 செல்லாது என்றுதான் பரிகாரம் கோருகிறேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.6ன் மதிப்பு ரூ.30 லட்சம் என்றால் எனக்குத் தெரியாது. எனவே இவ்வழக்கு உரிய நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் பணம் கொடுத்ததோ வாங்கியதோ 3ம் பிரதிவாதிக்கு தெரியாது என்றாலும்

அ.வ.எண்.40/2016 பொய்யான வழக்கு என்பதால் தான் 15.09.2017 தேதியில் தீர்ப்பான பின்னிட்டும் நிறைவேற்று மனு எதுவும் நான் இன்றுவரை தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரியல்ல.

**(மறுவிசாரணை இல்லை)**